விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி வட்டம் விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம் நரசிங்கனூர் ஊராட்சி மற்றும் கிராமம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : ஊராட்சி மன்ற தலைவர் திரு. A.பாக்கியநாதன்

தீர்மான எண் :172/2024 நாள் : 06.05.2024

பொருள் : உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு – விழுப்புரம் மாவட்டம் – விக்கிரவாண்டி வட்டம் – விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம் நரசிங்கனூர் ஊராட்சி மற்றும் கிராமம் – ச.எண்கள். 63/7A, 63/7B – 1.44 ஏக்கர் (அ) 5850 ச.மீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள "காமராஜர் நகர்" குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப இறுதி ஒப்புதல் – வழங்குதல் குறித்து.

பார்வை : 1. மனுதாரர் திரு.K. சுந்தரமூர்த்தி V. சம்பத் மற்றும் P. சிவசெல்வம் நரசிங்கனூர் அவர்களின் விண்ணப்பம் நாள்: 04.05.2024.

2. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் :04.05.2017

3. மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மாவட்டம் அவர்களின் கடிதம் இணையதள வாயிலாக ROC No.S33KCSN/2024/TCP, நாள்: 22.03.2024.

4. சார்பதிவாளர் பதிவுத்துறை, அன்னியூர் சார்பதிவாளர் அலுவலகம், தான ஆவண எண்.488/2024, நாள் :08.03.2024.

5. நில பயன் மாற்று கட்டணம் செலுத்து ரசீது. INDIAN OVERSEAS BANK Challan No.20240531011176, நாள்: 31.05.2024 மற்றும் கூராய்வு கட்டணம் செலுத்து ரசீது INDIAN BANK AC No. 7392902976, நாள் :31.05.2024.

*********

உத்திரவு :

உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு – விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம், நரசிங்கனூர் ஊராட்சி மற்றும் கிராமம், ச.எண்கள். 63/7A, 63/7B – 1.44 ஏக்கர் (அ) 5850 ச.மீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள "காமராஜர் நகர்" மனைப்பிரிவு பார்வை 1-ல் சுட்டிய கடிதங்களுடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதலுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பார்வை (2) மற்றும் (3)-ல் சுட்டியபடி

மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை (4)-ல் சுட்டியபடி சாலை, மூலை முடக்கு மற்றும் பொது ஒதுக்கீடுகளை தானபத்திர ஆவண எண்488/2024 நாள்:08.03.2024-ல் உள்ளாட்சியிடம் தானமாக ஒப்பபடைக்கப்பட்டு தானப்பத்திரம் அசல் பெறப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து பார்வை (3)-ல் மற்றும் பார்வை (5)-ல் சுட்டியபடி கூராய்வு கட்டணமாக மனைக்கு ரூ.1000/- வீதம் 33 மனைகளுக்கு ரூ.33000/- மற்றும் நில பயன் மாற்று கட்டணமாக ரூ.10500/- உத்தேச மனைப்பிரிவுக்கு செலுத்தப்பட்டுள்ளது.

மனைப்பிரிவிற்கு இணைப்பிலுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. இணையதளம் வாயிலாக ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு மேற்படி நரசிங்கனூர் ஊராட்சி மன்ற தீர்மான எண்:172/2024 நாள்:06.05.2024 என எண்ணிடப்பட்டு அசல் வரைபடங்கள் மற்றும் ஒப்புதல் ஆவண நகல் இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

உள்ளாட்சியின் இறுதி ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்மந்தப்பட்ட நகர் ஊரமைப்பு மற்றும் பத்திரபதிவு அலுவலகத்திற்கும் நில அளவை துறைக்கும், ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையத்திற்கும், தகவலுக்கும், உரிய நடவடிக்கைக்கும், அனுப்பிவைக்கப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனைகள் :</u>

1). மனைப்பிரிவுகள் சாலைகள் அனைத்தும் மனைப்பிரிவு வரைபடத்தின்படி உள்ளாட்சி சட்டங்களின் படி சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அபிவிருத்திக்கு எடுத்துக்கொள்ளப்படும். மேலும் பொது துறையில் இருந்து (Public Road) மனுதாரர் மனைப்பிரிவு அமையும் இடம் வரைஅணுகு சாலையாக காட்டப்பட்டுள்ள சாலைப்பகுதியை, உள்ளர்ட்சி தனது பொறுப்பில் எடுத்துக்கொள்ளும்.

2). மனைப்பிரிவு வரைபடத்தின் மனைப்பிரிவு சாலையும் OSR மற்றும் பொது ஒதுக்கீடு இடங்கள் இருப்பின் அதனையும் மனைப்பிரிவு வரைபடம் மற்றும் தானப்பத்திர நகலுடன் சம்பந்தபட்ட வட்டாட்சியருக்கு அனுப்பி வருவாய் ஆவணங்களில் உட்பிரிவுடன் தகுந்த பதிவுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

3). நகர் ஊரமைப்பு அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் அலுவலக அனுமதியின்றி மாற்றம் செய்யக்கூடாது.

4). சாலையின் இருபுறங்களிலும் 10 அடி தூரத்திற்கு ஒரு மரம் வீதம் நட்டு பராமரிக்கப்பட வேண்டும்.

5). மேற்கண்ட நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் இந்த உத்தரவு எப்போது வேண்டுமானலும் ரத்து செய்யப்படும்.

மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு விழுப்புரம் மாவட்டம் – விக்கிரவாண்டி வட்டம் – விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம், நரசிங்கனூர் ஊராட்சி மற்றும் கிராமம், ச.எண். 63/7A, 63/7B – 1.44 ஏக்கர் (அ) 5850 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் அமைந்துள்ள உத்தேச குடியிருப்பு சாதாரண வகை மனைகள் 33 (மனை எண்கள் 1 முதல் 33 வரை) மனைகளுக்கு "காமராஜர் நகர்" என்னும் பெயருடன் நரசிங்கனூர் ஊராட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

இணைப்பு

வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்

A-பாக்கியநாதன்

திரு. A.பாக்கியநாதன்
ஊராட்சி மன்ற தலைவர்,
நரசிங்கனூர் ஊராட்சி.

தலைவர்,
ஊராட்சி மன்றம், நரசிங்கனூர்,

பெறுநர்

திரு. k. சுந்தரமூர்த்தி V. சம்பத் மற்றும் P. சிவசெல்வம்
எண். 10, முருகன் கோவில் தெரு, புது நகர்,
காட்டேரிகுப்பம், புதுச்சேரி–605 502.